

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கமுதி ஊராட்சி ஒன்றியம் பேரையூர் கிராமத்தில் 20 ஆண்டுகால பொது மக்களின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு வனம் மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் .ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், சட்டமன்ற நிதியில் புதிய கழிவுநீர் கால்வாய் பணியை ஆய்வு மேற்கொண்டார்.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கம்!

# 20 இலட்சத்து 59 ஆயிரம் மாணவர்கள் பசியாறுவார்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஆக.25-**

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை நாளை (26 ஆம் தேதி) சென்னை மயிலாப்பூர் புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள் முன்னிலையில் தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளதையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் "காலை உணவுத் திட்டத்தில்" இனி 20 இலட்சத்து 59 ஆயிரம் மாணவர்கள் பசியாறு வார்கள் என பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்கள் விடுத்துள்ள பதிவு வருமாறு:-

காலை உணவுத் திட்டத்தில், இனி 20 இலட்சத்து 59 ஆயிரம் மாணவர்கள் பசியாறுவார்கள்!

நீதிக்கட்சி முதல் நமது திராவிட மாடல் அரசு வரை பள்ளிக் குழந்தைகளுக்கு உணவளித்து வயிற்றுப் பசியைப் போக்கி, அறிவுப்பசிக்குக் கல்வி வழங்குகிறோம்.

இது உணவு மட்டுமல்ல; உயர்வுக்கான உரம்!

நாளை 26.08.2025 அன்று நகர்ப்புறங்களிலுள்ள அரசு உதவி பெறும் பள்ளி களுக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்கிறோம்.

நாட்டுக்கே முன்னோடியாகத் திகழும் நமது பணிகள் தொடரும்! தமிழ்நாடு நாளும் உயரும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

# நெல்லை சங்கமம் நம்ம ஊரு திருவிழா!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. - அமைச்சர் கே.என்.நேரு துவக்கி வைத்தனர்!

நெல்லை.ஆக.25-

திருநெல்வேலி மாவட்டம் நெல்லை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவினை கழக நாடாளுமன்ற குழு தலைவர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் முரசுகொட்டி துவக்கி வைத்தார்கள்.

நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை வ.உ.சி மைதானத்தில் கலைப்பண்பாட்டுத் துறையின் சார்பில் இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள நெல்லை சங்கமம் நம்ம ஊரு திருவிழா கலைநிகழ்ச்சியினை அன்று (22.08.2025) கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள்,கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார்,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன்,மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப்,மாநகராட்சி மேயர் கோ.ராம கிருஷ்ணன்,மாநகராட்சி ஆணையாளர் மரு.மோனிகா ராணா, துணை மேயர் கே.ஆர்.ராஜு,மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெகதீஸ், ஆகியோர் முன்னிலையில் முரசு கொட்டி துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில் கழக துணை பொதுச்செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பேசியதாவது.

நாட்டுப்புறக் கலைகளை பாதுகாத்து வளர்த்திடவும்,இசைக் கல்வியினையும்,நுண்கலைக் கல்வி யினையும், அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச்சென்றிடவும்,அனைத்து கலை வடிவங்களையும் கலை நிகழ்ச்சிகள் மூலம் மக்களிடையே கொண்டு சேர்த்திடவும்,நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்களை ஊக்குவிக்கும் வண்ணம் கலை நிகழ்ச்சிகள் வழங்கி அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்துதல், நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கி கலைஞர்களை பாதுகாத்திடவும், செவ்வியல் மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் மற்றும் மாநில,மாவட்டக் கலை விருதுகள் வழங்கி கௌரவித்தல் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் வாயிலாக நலத்திட்ட உதவிகள் வழங்குதல் ஆகிய பணிகளை கலை பண்பாட்டுத் துறை மேற்கொண்டு வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் கிராமிய கலைகளை ஊக்கவிப்பதற்காக சென்னை சங்கமமத்தை தொடர்ந்து ஊக்கப்படுத்தி வந்தார்கள். முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன் கிராமிய கலைஞர்களை ஊக்கவிப்பதற் காகவும்,நமது கலாச்சார பண்பாட்டை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதற்காகவும் அழிந்து வரும் கிராமிய கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும்,சென்னை சங்கமம் என்ற கலை திருவிழாவினை மீண்டும் தொடங்கி வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது.

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் பொருட்டும், நாட்டுப்புறக் கலை வடிவங்களை பாதுகாத்திடும் பொருட்டும், உலகமெங்கும் தமிழ்நாட்டின் நாட்டுப்புறக் கலை வடிவங்களை அறியச் செய்திடும் வகையில் கலை பண்பாட்டுத் துறையின் வாயிலாக ஆண்டுதோறும் சென்னையில் தமிழர் திருநாளில் பிரம்மாண்டமான "சென்னை சங்கமம் " கலை விழா தொடர்ந்து நடத்தப்பட்டதன் காரணமாக கிராமிய கலைஞர்களை வாழ்க்கை தரம் இன்று முன்னேறி உள்ளது.அனைத்து கிராமிய கலைஞர்களும் இன்று தங்களது கலை திறமைகளை வெளிமாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளுக்கு சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்தும் அளவிற்கு முன்னேறி உள்ளனர். சிறப்பாக கலை நிகழ்ச்சிகளை மேற்கொண்ட நமது பகுதியை சேர்ந்த கிராமிய கலைஞர்களை தற்போது தொடர்பு கொண்டால் சிங்கப்பூர்,மலேசியா போன்ற வெளிநாடுகளில் கலை நிகழ்ச்சிகள் மேற்கொண்டு வருவதாக தெரிவித்து வருகிறார்கள்.

கிராமிய கலைஞர்களின் வாழ்க்கை தரத்தை முன்னேற்ற வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்கள் எண்ணத்தை சென்னை சங்கமம் நிகழ்ச்சி நிறைவேற்றி வருகிறது.அதிலும் குறிப்பாக நமது கிராமிய கலைஞர்கள் மாநில அளிவிலும்,ஒன்றிய அளவிலும் பல்வேறு விருதுகளையும் குடியரசு தலைவர் அவர்களால் வழங்கப்படும் பல்வேறு விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டு இன்று தமிழ்நாட்டிற்கு விருது சேர்க்கும் அளவிற்கு தங்களது திறமையை கிராமிய கலைஞர்கள் வெளிப்படுத்து வருகிறார்கள்.


நெல்லை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் தங்களது கலைத் திறமையினை காட்டியுள்ள கலைஞர்கள் மேன்மேலும் வளர்ந்து மாநில அளவிலும்,ஒன்றிய அளவிலும் கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பரிசுகள் மற்றும் விருதுகளை பெற்று நமது மாநிலத்திற்கு பெருமை சேர்த்து வருகின்றனர்.இன்று மற்றும் நாளை நடைபெறும் இரண்டு நாட்கள் நம்ம ஊரு திருவிழாவில் 400க்கும் மேற்பட்ட கலைஞர்கள் கலந்து கொண்டு தங்களது திறமையை வெளிப்படுத்தவுள்ளனர் அவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள் மற்றும் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு கழக துணை பொது செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தெரிவித்தார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மா.சுகன்யா, கிறித்த பணியாளர்கள் தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் நல வாரிய தலைவர் விஜிலா சத்தியானந்த்,முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான்,மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ந.சரவணன் அவர்கள்,கலை பண்பாட்டுத்துறை துணை இயக்குநர் வ.கோபால கிருஷ்ணன் மற்றும் அரசு அலுவலர்கள், நாட்டுப்புற கலைஞர்கள்,கழக நிர்வாகிகள்,பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.




சிவகங்கை மாவட்டம் சிவகங்கை மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் முடிகண்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு தினத்தை முன்னிட்டு ஒன்றியச் செயலாளர் பெ.மந்தக்காளை தலைமையில் நிர்வாகிகள் மகரஜோதி செல்வமணி, ரவி, அம்பலம், தியாகராசரன், ஆகியோர் கலைஞர் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினைமுன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது துறை சார்ந்த அதிகாரிகளிடம் பொது மக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்கள் குறித்து கேட்டு அறிந்தார்.அப்போது முகாமில் மின் இணைப்புபெயர் மாற்றம் குறித்து விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாகமின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ததற்கான உத்தரவினை பயனாளிகளுக்கு வழங்கினார்.உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன்,நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் துறை சார்ந்த அதிகாரிகள் உள்ளனர்.

### வாக்குப்பதிவு குறித்த நம்பகத் தன்மையை

# மக்கள் மன்றத்திற்கு தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்த வேண்டும்!

## "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, ஆக.25-

வாக்குப் பதிவு நம்பகத் தன்மையை மக்கள் பிரதிநிதிகளுக்கு மட்டுமின்றி மக்கள் மன்றத்திற்கும் தேர்தல் ஆணையம் தெளிவு படுத்த வேண்டும் என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து 24.08.2025 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-


தினகரன்
ஆகஸ்ட் 24, 2025 ஞாயிற்றுக்கிழமை
பேரணியில் ஓரணி
ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்திய நாடாளுமன்றத்திற்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் தேர்தல் நடக்கிறது. இதில் வாக்காளர்கள் ஜனநாயக கடமையை செலுத்தி, தங்களுக்கான மக்கள் பிரதிநிதிகளை தேர்வு செய்கின்றனர். அவர்கள் மக்களின் குரலாக நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் ஒலித்து வருகின்றனர். இந்தியாவில் ஆரம்பகட்ட தேர்தல்கள் என்பது, வேட்பாளர்களுக்கான சின்னங்களில் முத்திரையிட்டு வாக்கை பதிவு செய்யும் வகையில் இருந்தது. இப்படிப்பட்ட நிலையில், அறிவியலின் வளர்ச்சியால் 2004ம் ஆண்டு பொதுத்தேர்தலில், முதல்முறையாக மின்னணு வாக்குப்பதிவு முறை அமலுக்கு வந்தது. அன்றிலிருந்து 20ஆண்டுகளாக, இந்த முறையில் தான் வாக்குப்பதிவு நடந்து வருகிறது. ஒவ்வொரு தேர்தலிலும் மின்னணு வாக்கு இயந்திரங்களின் நம்பகத்தன்மை குறித்து எதிர்க்கட்சிகளும், நடுநிலையாளர்களும் பல்வேறு கேள்விகளை முன்வைத்து வருகின்றனர். இதற்கு 100சதவீதம் தெளிவான தீர்வு என்பது, இதுவரை கிடைக்காத ஒன்றாகவே உள்ளது.
இப்படிப்பட்ட நிலையில், காங்கிரஸ் மூத்த

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்திய நாடாளுமன்றத்திற்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் தேர்தல் நடக்கிறது. இதில் வாக்காளர்கள் ஜனநாயக கடமையை செலுத்தி, தங்களுக்கான மக்கள் பிரதிநிதிகளை தேர்வு செய்கின்றனர். அவர்கள் மக்களின் குரலாக நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் ஒலித்து வருகின்றனர். இந்தியாவில் ஆரம்ப கட்ட தேர்தல்கள் என்பது, வேட்பாளர்களுக்கான சின்னங்களில் முத்திரையிட்டு வாக்கை பதிவு செய்யும் வகையில் இருந்தது. இப்படிப்பட்ட நிலையில், அறிவியலின் வளர்ச்சியால் 2004ம் ஆண்டு பொதுத்தேர்தலில், முதல்முறையாக மின்னணு வாக்குப் பதிவு முறை அமலுக்கு வந்தது. அன்றிலிருந்து 20ஆண்டுகளாக, இந்த முறையில்தான் வாக்குப்பதிவு நடந்து வருகிறது. ஒவ்வொரு தேர்தலிலும் மின்னணு வாக்கு இயந்திரங்களின் நம்பகத் தன்மை குறித்து எதிர்க்கட்சிகளும், நடுநிலையாளர்களும் பல்வேறு கேள்விகளை முன்வைத்து வருகின்றனர். இதற்கு 100சதவீதம் தெளிவான தீர்வு என்பது, இது வரை கிடைக்காத ஒன்றாகவே உள்ளது.

இப்படிப்பட்ட நிலையில், காங்கிரஸ் மூத்த தலைவரும், நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவருமான ராகுல்காந்தி, 'வாக்குத்திருட்டு' என்ற பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்தார். பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டதும், பெங்களூரு உள்ளிட்ட இடங்களில் போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்டதும் அவரது குற்றச்சாட்டில் பிரதானமாக இருந்தது.

மேலும், இதற்கான ஆதாரங்களையும் அவர், மக்கள் மன்றத்தில் எடுத்து வைத்தார். போலி வாக்காளர்கள், போலி முகவரி, ஒரே முகவரியில் அதிக வாக்காளர்கள், தவறான புகைப்படங்கள் படிவம் 6ஐ தவறாக பயன்படுத்துதல் உள்ளிட்ட 5வழிகளில் இந்த வாக்கு திருட்டு நடந்துள்ளது. ஒன்றியத்தை ஆளும் பா.ஜ. அரசும், தேர்தல் ஆணையமும் கூட்டு வைத்து வாக்குத்திருட்டில் ஈடுபட்டுள்ளனர் என்ற அவரது தெளிவான குற்றச்சாட்டு, இது நாடு முழுவதும் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தி உள்ளது.

ஆனால் ஒன்றிய அரசும், தேர்தல் ஆணையமும் இது வரை இதற்குரிய தெளிவான விளக்கத்தை தரவில்லை என்பது ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளின் குமுறலாக மாறியுள்ளது. இந்த நிலையில் 'வாக்காளர் உரிமை யாத்திரை' என்ற பெயரில், புதிய முன்னெடுப்பை கையில் எடுத்துள்ளார் ராகுல் காந்தி. பீகாரின் சசாரம் என்ற இடத்தில் தொடங்கி, ஆரம்பமான இந்த பயணத்தில் மக்கள் வெள்ளமும் அலையென திரண்டு வருகிறது. இந்த எழுச்சியை மேம்படுத்தும் வகையில், பீகாரில் தொடர் பேரணி ஒன்றை நடத்துகிறார் ராகுல்காந்தி.

வரும் 27ம்தேதி நடக்கும் இந்த பேரணியில் தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார். இதேபோல் ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த்சோரன், தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி, இமாசல பிரதேச முதல்வர் சுக்விந்தர்சுகு, கர்நாடக முதல்வர் சித்தராமையா ஆகியோர் பங்கேற்கின்றனர். மேலும், எதிர்க்கட்சிகளை சேர்ந்த பல்வேறு தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று ஏராளமானோர் திரளாக பங்கேற்க முடிவு செய்துள்ளனர். ஆனால், இதற்கு ஒன்றிய அரசும், தேர்தல் ஆணையமும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதையே அவர்களின் மெத்தனப்போக்கு காட்டுகிறது.

"ஆளுங்கட்சி மட்டுமன்றி, எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் தேர்வு செய்து பணியாற்ற அனுப்பி வைக்கும் எஜமானர்கள் மக்கள் தான். அவர்களின் பிரதிநிதிகளாகவே இந்த பேரணியை நடத்துகின்றனர் எதிர்க்கட்சிகள். இதன்படி பேரணியில் ஓரணியாக மக்களும் உள்ளனர். எனவே வாக்குப்பதிவு குறித்த நம்பகத்தன்மையை மக்கள் பிரதிநிதிகளுக்கு மட்டுமின்றி மக்கள் மன்றத்திற்கும் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்த வேண்டும் என்கின்றனர் நடுநிலையாளர்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



விழுப்புரம் தெற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் கற்பகம், தலைமை கழக வழக்கறிஞர் சுவை.சுரேஷ், தொகுதி பார்வையாளர் சிவ.ஜெயராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.செல்வராஜ், அப்துல் சலாம், பொதுக்குழு உறுப்பினர்கள் பக்தவச்சலு, காடுவெட்டி ஏழுமலை, ஒன்றிய செயலாளர்கள் மு.தங்கம், க.மும்மூர்த்தி, ஜி.ரவிச்சந்திரன், கல்பட்டு வி.இராஜா, அ.சா.ஏ.பிரபு, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஜெய.ரவிதுரை, வேம்பி.ரவி, ஆர்.முருகன் எஸ்.லூயிஸ், ஜெ.ஜெயபால், ஆர்.பி.முருகன், நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், பேரூர் செயலாளர்கள் சுந்தரமூர்த்தி, பூக்கடை கணேசன், நயினா முகமது, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.